මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2025/69** **2025.04.25**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
## உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம் சம்பந்தமாக நடவடிக்கைகள் 2025.04.16 ஆம் திகதி ஆரம்பமானது.

அதேபோல் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் விசேட தினங்களான **2025.04.20, 2025.04.27** ஆகிய திகதிகளில் அவற்றை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதோடு, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் இறுதி விநியோகம் **2025.04.29** ஆம் திகதி இடம்பெறும். **2025.04.29** ஆம் திகதிக்குப் பின்னரும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் 2024 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக தேருநர் இடாப்பில் தாம் பதிவுசெய்துகொண்ட முகவரிக்கு உரிய அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று தமது ஆளடையாளத்தை வெளிப்படுத்தியதன் பின்னர் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை பெற்றுக் கொள்ள முடியும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை கைவசம் வைத்திருப்பது வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரை அடையாளம் காண்பதற்கு வசதியானதாக அமையுமென்று தேர்தல் ஆணைக்குழு மேலும் அறிவிக்கிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்